**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, Fast PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.63 /2022 |
| Deposition of witness | | PW-7 /LW-7 |
| Name | | திரு.ராஜசந்திரசேகர் |
| Father’s Name | | திரு.முருகேசன் |
| Village | | முத்துப்பேட்டை |
| Taluk | | திருத்துறைப்பூண்டி |
| Age | | 39/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25th day of June 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திருமதி.உஷா (உதவியாளர்) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற முதல்நிலை காவலர் 1375 மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

19.09.2018 அன்று பட்டுக்கோட்டை அரசு மருத்துவமணையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது காலை 10.00 மணியளவில் நடுவிக்கோட்டை கிராமத்தை சேர்ந்த முருகையன் மகன் 66 வயதுடைய ராஜசேகரன் என்பவரை அவரது மகன் சிகிச்சைக்கு அழைத்துவந்தார். அவரை தன்னை தெரிந்த மூன்று நபர்கள் 19.09.2018 அன்று காலை 08.30 மணிக்கு அவரை வீட்டில் வைத்து மரக்கட்டை மற்றும் கற்களால் நெஞ்சிலும், கழுத்திலும், மூக்கிலும் தாக்கியாதாக கூறினார். நான் அவரின் உடலை பரிசோதித்ததில் அவர் கழுத்திலும், மூக்கிலும சிராய்ப்பு இருந்தது. அவர் தனக்கு நெஞ்சுவலி இருப்பதாக கூறினார். அவர் உள்நோயாளியாக சிகிச்சை அளித்து 23.09.2018 அன்று அவரை சிகிச்சையில் இருந்து விடுவித்தேன். அவரை முழுவதுமாக பரிசோதித்தபின் அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று காயச்சான்று வழங்கினேன். நான் பதிவுசெய்த விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ**-7 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள். எந்த தேதியில் யார் விசாரித்தார்கள் என்று தெரியுமா என்றால், ஞாபகம் இல்லை. போலீஸார் என்னை வழக்கு ஆயுதங்களை காட்டி சம்பந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால், இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணமான **அ.சா.ஆ.**7 -ல் நெஞ்சு வலி மட்டும்தான் எழுதியிருக்கிறது என்று சொன்னால், நான் மூக்கிலும், கழுத்திலும் சிராய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று கண்டறிந்து குறிப்பிட்டிருந்தேன். அந்த சிராய்ப்பு காயமானது சாதாரனமாக கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. கட்டைக்கும் கம்புக்கும் வித்தியாசம் உண்டா என்றால், உண்டு. நெஞ்சு வலி என்பதை மருத்துவ ரீதியாக உணர முடியுமா என்றால், முடியாது. ராஜசேகரன் என்பவர் போலீஸ் மெமோவுடன் வந்தாரா அல்லது தனியாக வந்தாரா என்றால், மருத்துவனணைக்கு அவருடைய மகனுடன் மட்டுமே வந்தார். சிராய்ப்பு காயங்களை தவிர இரத்த காயங்கள் ஏதேனும் ஏற்பட்டிருந்ததா என்றால், இல்லை.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/– மா. விசால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்(நீதித்துறை நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை